# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண் : 49

## அறிவிப்புகள்
## 2025 - 2026

**உதயநிதி ஸ்டாலின்**
துணை முதலமைச்சர்

## 28. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்காக CCTV கேமராக்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது விளையாட்டு மற்றும் உடற்கல்வியியல் கல்வி தரத்தை மேம்படுத்துவதில் தனித்துவமான பங்கு வகிக்கிறது. மேலும் இது விளையாட்டு மற்றும் விளையாட்டு அறிவியல் வளர்ச்சிக்கு முதன்மை நிலை மையமாக திகழ்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துவதற்கு CCTV கேமராக்களை நிறுவுதல் மற்றும் இணைய இணைப்பை மேம்படுத்துதல் ஆகியவை அவசியமாகின்றது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு இணைய இணைப்பு மற்றும் CCTV கேமராக்களை நிறுவுவதற்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**29. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகளுக்காக முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு மைதானம் (Youth Sports Arena) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாணவ மாணவிகள் பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கும், அவர்களுடைய செயல் திறனை மேம்படுத்த புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகள் நடத்துவதற்கு ஏதுவாக உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு மைதானம் (Youth Sports Arena) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.